<u>சாட்சியின் வாக்குமூலம்</u>

<u>திருவள்ளூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம்</u>

**<u>அசல் வழக்கு எண்</u> : 241/2015**

**PW1 – திருமதி.சுமதி, க/பெ.முனிவேல்**

**13.02.2025**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ந்து செய்ய அனுமதிக்கப்படுகிறார்</u>

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

**<u>நேரம் 15.26 மணி.</u>**

தாவா வழக்கு என்ன பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சொத்துக்களில் எனக்கும் என் தாயாருக்கும் உரிமை கேட்டு போட்டுள்ளேன். தாவா வழக்கு சொத்து விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எந்த வருடத்தில் எனக்கு திருமணமானது என்றால் 1995ம் வருடத்தில் நடந்தது. எனது திருமணம் என் அப்பாவின் விருப்பம் இல்லாமல் நடைபெற்றது என்றால் சரிதான், அது காதல் திருமணம் ஆகும். அந்த தேதியில் இருந்து நான் என் தந்தையிடம் பேசவில்லை என்றால் 2000ம் வரை பேச்சுவார்த்தை இல்லை. அதன்பிறகு பேசினோம். தனியாகத்தான் இருக்கிறேன் என்றால் சரிதான். திருமணம் முடிந்து என் கணவருடன் சேர்ந்து வாழ்கிறேன். என் தந்தையின் பெயர் ஆதிமூலம் என்றால் சரிதான். அவர் எப்போது இறந்தார் என்றால் 30.07.2011 அன்று இறந்தார். என் அப்பா இறந்ததற்கு இறப்புச்சான்றிதழ் மற்றும் வாரிசுரிமைச்சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என் பிரமாண வாக்குமூலத்தில் இந்து வாரிசுரிமைச் சட்டம் பற்றி கூறியுள்ளேன், அதுகுறித்து எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. என் அப்பாவின் சொத்து அவரின் சுயவருமான சொத்து என்பதை நிரூபிக்க ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

அவ்வாறு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**<u>நேரம் 15.35 மணி</u>**

**<u>நீதிமன்ற பணிகளுக்கு பிறகு மீண்டும் குறுக்கு விசாரணை தொடர்ச்சி. நேரம் 15.50 மணி</u>**

முனியம்மாள் என் பாட்டி என்றால் சரிதான். அவர் எப்போது இறந்தார் என்றால் என் தந்தை இறந்து 2 அல்லது 3 வருடத்தில் இறந்துவிட்டார். என் பாட்டி இறந்ததற்கு இறப்புச்சான்றிதழ் மற்றும் வாரிசுரிமைச்சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இறப்புச்சான்றிதழை தாக்கல் செய்துள்ளேன். இரண்டாம் பிரதிவாதி மணி உடன் செய்த ஒப்பந்தம் குறித்து எனக்கு தெரியுமா என்றால் அதையும் சேர்த்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். முதல் முறையாக என் தம்பிக்கு எப்போது வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் 20.09.2011 அன்று அனுப்பினோம். அதன்பின்னர் சமரசம் பேசி எவ்வளவு பணம் வாங்கினேன் என்றால் நிலம் விற்ற தொகையில் என்னுடைய பாகமான ரூ.3,15,000/- கொடுத்தார்கள். அன்றைய தேதியில் நான் 6 லட்சம் ரூபாய் வாங்கினேன் என்றால் சரியல்ல. சமரசம் பேசும்போதே என் அப்பாவின் சொத்தில் என்னுடைய பாகத்தை வாங்கிவிட்டு பாகப்பிரிவினை அன்றைய தேதியில் முடிந்துவிட்டது என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை பகுதி முடிந்த நேரம் 15.59 மணி</u>**

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி மற்றொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.